## விவசாய விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகம் - 2010

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விவசாய விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டுக் நியமம்

கீழே காட்டப்பட்டுள்ள இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அரசின் மானியங்கள் மூலம் 2005 ஆண்டிலிருந்து 2010 திசெம்பர் 31 ஆம் திகதி வரை கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 44,775,893 கூட்டுத்தொகைப் பெறுமதியான நிலையான சொத்துக்கள் தொடர்பாக இலங்கை கணக்கீட்டுக் நியமம் 24 இற்கு இணங்க அவற்றின் வருடாந்த பெறுமானத்தேய்வுத் தொகைக்கு சமமான அளவொன்றை பிற்போடப்பட்ட வருமானமாக நிதிக்கூற்றில் இனங்காணப்பட்டு அரச மானியக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 64,561,516 கிரயத்திலான 09 நிலையான சொத்து விடயங்களுக்குரிய பெறுமானத்தேய்வு கழிக்கப்பட்டதன் பின்னர் பெறுமதி பூச்சியமாக இருந்த போதிலும், அந்நிலையான சொத்துக்களை தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படுகின்றமையால் இலங்கை கணக்கீட்டுக் நியம இலக்கம் 18 இன் பிரகாரம் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு அப்பெறுமதியை கணக்குகளில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை கணக்கீட்டுக் நியம இலக்கம் 18 மற்றும் 1995 ஒக்தோபர் 05 ஆம் திகதிய 649 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் பிரகாரம் சொத்தொன்று அதன் பயன்படு ஆயுட்காலத்தினுள் பெறுமானத்தேய்வு செய்யப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 4,226,665 பெறுமதியான நிலையான சொத்துக்களுக்கு அதன் பிரகாரம் பெறுமானத் தேய்வு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

1.2.2 **கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது கீழே காட்டப்பட்டுள்ள வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கணக்குகளில் குறைத்தும் கூடுதலாகவும் காண்பித்தல்கள் முறையே ரூபா 1,278,168 மற்றும் ரூபா 3,736,702 ஆக இருந்தது.

| கணக்கு | கூடுதலாகக் காண்பித்தமை | குறைத்துக் காண்பித்தமை |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| ஆதனங்கள் பொறி மற்றும் உபகரணங்கள் (கட்டிங்கள்) | 2,658,180 | - |
| பணிக்கொடை ஒதுக்கீடு | 319,732 | - |
| வாகன அனுமதிப்பத்திரமும் காப்புறுதிக் கட்டணமும் | 49,443 | - |
| ஏனைய உடன்படிக்கை சேவைகள் | 21,103 | - |
| மின்சாரம் | 13,697 | - |
| ஏனைய மீண்டுவரும் செலவினம் | - | 119,403 |
| ஏனைய மீண்டுவரும் செலவினம் | 60,000 | - |
| சுத்திகரிப்புச் சேவைக்கானசெலவினம் | - | 55,509 |
| பாதுகாப்பு சேவைச் செலிவனம் | - | 11,001 |
| நிலையான சொத்துக்கள் | 216,092 | - |
| ஏனைய படிகள் | 6,500 | - |
| முத்திரைக் கட்டணங்கள் | - | 5,625 |
| புகையிரத ஆணைச்சீட்டுக் கட்டணம் | 9,460 | 4,290 |
| நூலகப் புத்தகங்கள் | - | 13,625 |
| ஆதனங்கள் பொறி மற்றும் உபகரணங்கள் (வாகனங்கள்) | 339,277 | - |
| பெறுமானத் தேய்வு | 43,218 | - |
| பொது செயற்பாட்டு நிதியம் | - | 459,620 |
| ஆதனங்கள் பொறி மற்றும் உபகரணங்கள் | - | 609,095 |
| | 3,736,702 | 1,278,168 |

(ஆ) மெய்மையாய்வுச் சபையினால் பாவனையிலிருந்து கைதவிர்ப்புச் செய்வதற்கு விதந்துரைக்கப்பட்டிருந்த 167 பொருள் அலகுகளின் பெறுமதி நிலையான சொத்துக் கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை.

(உ) பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 99(1) ஆம் பிரிவின் பிரகாரம், நிறுவனத்திற்கு கிடைக்கப்பெறும் சகல பெறுவனவுகளையும் நிறுவனத்தின் நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 2,974,615 தொகையை அவ்வாறு நிதியத்திற்குச் செலவு வைக்காமல் 03 வெவ்வேறு நிதியக் கணக்குகளுக்கு செலவு வைக்கப்பட்டு, அதிலிருந்து ரூபா 2,352,659 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. அக்கொடுக்கல் வாங்கல்களை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்காமல் மீளாய்வாண்டின் இறுதியில் மேற்படி கணக்குகளிலான மீதிகளை மட்டும் ஐந்தொகையில் ஏனைய மானியங்களாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

| நிதியங்கள் | 2010.01.01 இல் மீதி | பெறுவனவுகள் | செலவினங்கள் | 2010.12.31 இல் மீதி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வருடாந்த கருத்தரங்கு கணக்கு | 3,268,656 | 2,449,084 | 1,417,445 | 4,300,295 |
| மாணவர் புலமைப் பரிசு கணக்கு | 7,174,411 | 318,996 | 228,200 | 7,265,207 |
| வெளியீட்டு கணக்கு | 500,479 | 206,535 | 707,014 | - |
| | 10,943,546 | 2,974,615 | 2,352,659 | 11,565,502 |

(ஈ) 2010 மெய்மையாய்வு அறிக்கையின் மூலம் பரிந்துரை செய்யப்பட்ட பயன்படுத்த முடியாத ரூபா 3,150 பெறுமதியான 01 பொருள் உருப்படியும் காலாவதியாகிய ரூபா 123,264 பெறுமதியான 1200 மாணவர் கைநூல்களும் ரூபா 92,500 பெறுமதியான 260 புத்தகங்களுமாக ரூபா 218,914 கூட்டுத்தொகை பெறுமதியினை இருப்புக் கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) நிறுவகத்தினால் நடாத்திச் செல்லப்படுகின்ற தனியார் நிழற்படப் பிரதி பிரிவிற்காக 2009 நவம்பர் முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையில் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குச் செலுத்த வேண்டிய காணிக்கான வாடகை கணக்கீடு செய்யப்பட்டு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், நிதிக்கூற்றுக்களில் அதற்குரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) குறுகிய கால பாடநெறிகளைப் நடாத்துவதற்காக செலவிடப்பட்ட ரூபா 54,404 தொகை மற்றும் பொது மேந்தலைக்காகச் செலவினத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 67,050 தொகை என்பவற்றை 109 ஆம் இலக்க நாட்குறிப்பினால் ஏனைய மீண்டுவரும் பொது மேந்தலை செலவினக் கணக்கிற்கு சீராக்கப்பட்டிருந்த போதிலும், குறுகிய கால பாடநெறிச் செலவினக் கணக்குகளுக்கு சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) 2009 ஆம் ஆண்டின் போது ஆய்வு நடவடிக்கைகளுக்காக ஆராய்ச்சி ஒருங்கிணைப்பாளருக்கு செலுத்தப்பட்ட ரூபா 75,000 தொகையான மதியுரைக் கட்டணம் மற்றும் ரூபா 50,000 தொகையான முற்பணம் என்பவற்றிற்குரிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்படாமை அடிப்படையில் மீள அறவீடு செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், அறவிடப்பட வேண்டிய ரூபா 75,000 தொகையான மதியுரைக் கட்டணத்திற்காக சீராக்கம் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், முற்பணத்தை மீள் நிரப்பும் போது காசேட்டில் வரவு வைக்கப்பட்டு முற்பணக் கணக்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், காசேட்டிற்கு வரவு வைப்பதற்குப் பதிலாக செயற்திட்டக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஏ) நிறுவகத்தின் மாணவர் ஒருவருக்காக வெளிநாட்டு நிறுவனமொன்றினால் அனுப்பப்பட்டிருந்த ரூபா 400,284 தொகையான வாழ்க்கை செலவினக் கொடுப்பனவுத் தொகையை ஆண்டின் செலவினமாகக் கருதி ஏனைய செலவினத்திற்கு கீழும் அத்தொகையை வருமானமாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 1.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2000 ஆம் ஆண்டிற்கு முன்னர் பேராதனைப் பல்கலைகழகத்திடமிருந்து அறவிடப்பட வேண்டியதாக இருந்த ரூபா 166,131 தொகையொன்றினை முறையாக இனங்காணாமல் நிறுவகத்திற்கு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் மீளாய்வாண்டின் இலாபத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது.

### 1.2.4 பெற வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1993 ஆம் ஆண்டு முதல், நிலவி வரும் ரூபா 5,000 தொகையான குறித்த பணிக்கான துணைக் கட்டுநிதி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பேராதனை இலங்கை வங்கியில் பேணப்படும் நடைமுறைக் கணக்கில் 2003 முதல் 2010 யூலை வரையான காலப்பகுதிக்கு உரிய வைப்புச் செய்யப்பட்ட ஆனால் தீர்க்கப்படாத ரூபா 10,230 தொகை பெறுமதியான 06 காசோலைகளும் பேராதனை மக்கள் வங்கியில் பேணப்படும் நடைமுறைக் கணக்கில் 2010 ஆகஸ்ட் மாத வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் காண்பிக்கப்பட்ட வைப்புச் செய்தும் தீர்க்கப்படாத ரூபா 6,240 பெறுமதியான 02 காசோலைகள் மற்றும் 13 காசுக் கட்டளைகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 188 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2010 சனவரி மாதம் செலுத்தப்பட்ட ரூபா 1,500 சம்பள முற்பணத் தொகையொன்றையும் இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 10,580 ஆன இடர் கடன் மீதியொன்றையும் 2011 மே வரையில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கீழே காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களுக்கு முன்னால் காட்டப்பட்டுள்ள சான்றுகள் இல்லாததன் காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமான முறையில் சான்றுறுதி செய்யவோ ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

| விடயங்கள் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| நிலையான சொத்துக்கள் | 122,081,134 | நிலையான சொத்துப் பதிவேடுகள் மற்றும் பட்டோலைகள் |
| விஞ்ஞான வைப்புக்கள் | 4,710,982 | வைப்புப் பதிவேடுகள் |
| நூலக வைப்புக்கள் | 8,879,849 | வைப்புப் பதிவேடுகள் |
| கேள்வி வைப்புக்கள் | 139,795 | வைப்புப் பதிவேடுகள் |

### 1.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே காட்டப்பட்டுள்ள இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்புகள் | இணங்காமை |
|---|---|
| (அ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச் சட்டத்தின் 45 ஆம் பிரிவு | உப வேந்தரினது அங்கீகாரம் இல்லாமல் மாதாந்தம் ரூபா 20,000 வீதம் ரூபா 120,000 தொகையினை தகவல் தொழிநுட்ப நிலையத்திற்குச் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) நிதிப்பிரமாணம் (நி.பி) | |
| (i) 115 | முன்னைய ஆண்டிற்குரிய கொடுப்பனவு களுக்காக 06 சந்தர்ப்பங்களில் உரிய அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் ரூபா 169,450 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ii) 135,136 மற்றும் 137 | நிறுவகத்தில் கடமை புரியும் 21 உத்தியோகத்தர்களுக்கு வருடாந்தம் நிதி அதிகாரக் கையளிப்பு வழங்கப்பட்டிருக்க வில்லை. |
| (iii) நி.பி 371 | (i) குறித்த நோக்கத்திற்கான துணைக் கட்டுநிதியாக வழங்கக்கூடிய ஆகக் கூடிய தொகை ரூபா 20,000 ஆன போதிலும், ரூபா 25,000 முதல் 95,200 வரையான முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்த 10 சந்தர்ப்பங்கள் தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டன. |

| | |
|---|---|
| (ii) | துணைக்கட்டுநிதி குறித்த செயற்பாட்டிற்கு மட்டுமே வழங்கப்பட வேண்டிய போதிலும் 06 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 33,987 தொகையினை 04 நாட்கள் முதல் 30 நாட்கள் வரையில் கையில் வைத்திருக்கப்பட்டு பின்னர் தீர்க்கப்பட்டிருந்தது. |
| (iv) 756 | ரூபா 32,709,466 பெறுமதியான நூலகப் புத்தகங்கள் தொடர்பான கணிப்பீட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (v) 1645 | வாகனங்களின் சம்பவப் பதிவேட்டுப் புத்தகங்களில் வாகனம் தொடர்பாக அனைத்து விபரங்களும் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், 02 வாகனங்களின் சம்பவப் பதிவேடுகளில் அத்தகல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |
| (vi) 1646 | நிறுவனத்திடமுள்ள 04 வாகனங்களில் 2010 ஆம் ஆண்டு வரையிலும் நாளாந்த ஓட்டப்பதிவேடுகளுடன் மாதாந்தப் பொழிப்புக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பியிருக்கவில்லை. |
| (இ) 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/ 2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | கணனி இயந்திரங்களுக்குரிய நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஈ) | 2006 சனவரி 25 ஆம் திகதிய 10 ஆம் இலக்க கொள்வனவு முகவராண்மைத் தலைவரின் சுற்றறிக்கையின் 5.4.12 ஆம் பந்தி | பெறுமதி சேர்க்கப்பட்ட வரி தொடர்பான விபரங்களை கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களுக்கு பிரதிகளுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும், 12 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்ட ரூபா 97,502 வரித் தொகை தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | (i) இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் தாபன விதிக்கோவை யின் XIV ஆம் அத்தியாயத்தின் 8.1.2 ஆம் பிரிவு | மோட்டார் வாகனங்களுக்கு மைல் கட்டணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் அதற்காக நிறுவகப் பணிப்பாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், 20 சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 189,057 தொகையான மைல் கட்டணம் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 28.6 ஆம் பந்தி | பிரயாணச் செலவின விண்ணப்பம் குறித்த பயணம் நிறைவுற்று 30 நாட்களுக்குள் சமர்ப்பிக்கப்படாதிருந்தால் அதற்காக தாமதக் கட்டணம் அறவிடப்பட வேண்டிய போதிலும், 13 சந்தர்ப்பங்களில் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 155,995 தொகைக்குரிய பிரயாணச் செலவின விண்ணப்பங்கள் தொடர்பாக ரூபா 19,311 தொகையான தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் 422 ஆம் சுற்றறிக்கையின் பிரகாரம் | பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தின் 04 விரிவுரையாளர்களுக்காக உப வேந்தரினதும் கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரமும் இல்லாமல் ரூபா 199,772 தொகையான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப் பட்டிருந்தன. |

| | | |
|---|---|---|
| (எ) | 1990.10.10 ஆம் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | 06 மாங்களுக்கு ஒரு முறை வாகனங்களில் எரிபொருள் நுகர்வு தொடர்பாக முறையான பரிசோதனையொன்று நடாத்தப்பட வேண்டிய போதிலும், நிறுவனத்திடம் காணப்பட்ட 04 வாகனங்கள் தொடர்பாக அத்தேவைப்பாடு நிறைவேற்றப்படாத காரணத்தால் 01 லீற்றர் எரிபொருளுக்கு 5.26 முதல் 25.12 வரை வெவ்வேறு தூர அளவுகள் இடப்பட்டு ஓட்டக்குறிப்பேடுகள் தயாரிக்கப்பட்டிருந்தன. |

### 1.2.7 போதியளவான அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன

(அ) 1978 மார்ச் 10 ஆம் திகதிய பீஈ/1/774/11 (பி) ஆம் இலக்க பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்பட்டிருந்த சுற்றறிக்கை ஆலோசனைகளின் படி இரண்டாம் மூன்றாம் மொழித் தேர்ச்சிக் கொடுப்பனவாக 1996 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 1,118,472 செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2003 யூலை 18 ஆம் திகதிய பீடி/ஐ/என்எஸ்/டிஎல்/ஜீஎஸ்/ஏ078 இலக்கமுடைய வரவு செலவுத் திட்ட பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கைக் கடிதத்தின் பிரகாரம் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றிற்கான பங்களிப்புத் தொகையைக் கணக்கிடும் போது கல்விசார் கொடுப்பனவை கருத்திற்கொள்ளக் கூடாத போதிலும், அதற்கு முரணாக 2001 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரை ரூபா 2,589,719 தொகையான கல்விசார் கொடுப்பனவிற்காக ரூபா 466,147 பங்களிப்புத் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 2003 நவம்பர் 29 ஆம் திகதிய 837 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையை மீறி 2004 நவம்பர் 24 ஆம் திகதிய முகாமைத்துவ சபைத் தீர்மான இலக்கம் 150.2.1 இன் பிரகாரம் வெளிவாரி விரிவுரையாளர்களுக்கு பெறுபேறுகளை விரைவாகப் பெற்றுக்கொள்வதற்காக 10% ஆன ரூபா 216,050 உபகாரப் படி மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்தது.

## 2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

---

### 2.1 நிதிசார் மீளாய்வு

---

#### 2.1.1 நிதிசார் விளைவுகள்

---

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக நிறுவகத்தின் செயற்பாடுகளிலிருந்து மீண்டெழும் செலவிற்கான அரசாங்க மானியத்தைத் கருத்திற் கொள்வதற்கு முன்னர் ரூபா 1,770,860 தொகை மிகையாக இருந்ததுடன், மீண்டெழும் செலவினத்திற்காக ரூபா 18,000,000 ஆன அரசாங்க மானியத்தினை கணக்கில் எடுத்துக் கொண்டதன் பின்னர் இம்மிகை ரூபா 19,770,860 வரை அதிகரித்திருந்தது. முன்னைய ஆண்டிற்காக மீண்டெழும் செலவிற்கான அரசாங்க மானியத்தை கணக்கில் எடுத்துக்கொள்ள முன்னர் முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 6,514,710 ஆனதுடன், மீண்டெழும் செலவினத்திற்காகப் பெறப்பட்ட ரூபா 14,200,000 தொகையான அரசாங்க மானியத்தைக் கணக்கில் எடுத்ததன் பின்னர் இப்பற்றாக்குறை ரூபா 7,685,290 ஆன மிகையாக அதிகரித்திருந்தது.

#### 2.1.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

---

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கல்விசார் பதவியணியின் விரிவுரையாளர்களுக்கு இந்நிறுவனத்தில் வெளிவாரி விரிவுரைகளை மேற்கொண்டமைக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், பல்கலைக்கழகத்தின தாபன விதிக்கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 1.2 மற்றும் 1.3 ஆம் பந்தியின் பிரகாரம் அதற்காக பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அதிகாரிகளிடமிருந்து முன் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டமைக்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், தாபன விதிக்கோவையின் IX ஆம் அத்தியாயத்தின் 2.3 ஆம் பந்தியின் பிரகாரம் வெளிவாரி விரிவுரைக் கட்டணம் தொடர்பாக செலுத்த வேண்டிய ரூபா 138,840 அரசிறை அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

### 2.2.1 செயலாற்றுகை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன

(அ) மீளாய்வாண்டில் 1,651 பட்டப்பின் படிப்பு பரீட்சார்த்திகள் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக ஆண்டில் ஏற்பட்ட செலவினத்திற்கு ஒப்பாக ஒரு மாணவருக்கான கிரயம் ரூபா 31,402 ஆக இருந்ததுடன், முன்னைய ஆண்டின் போது அப்பெறுமதி ரூபா 25,709 ஆகவும் இருந்தது.

(ஆ) ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதே நிறுவகத்தின் பிரதான நோக்கம் ஆயினும் கடந்த 5 ஆண்டுகாலமாக ஆய்வு நடவடிக்கைகளுக்காக எவ்வித செலவினமும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 2008 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் கீழ் ஆராய்ச்சி நடவடிக்கைளுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 7,977,611 மானியத்திற்காக 2009 ஒக்தோபர் 16 ஆம் திகதி வரையில் இறுதி செயன் முன்னேற்ற அறிக்கை அனுப்பப்பட வேண்டிய போதிலும் 2010 திசெம்பர் மாதம் வரையிலும் ரூபா 7,715,300 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், 2011 மே வரையில் ஆய்வுச் செயற்பாடு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 4,000 மாணவர்களுக்காக அடையாள அட்டை முறைமை ஒன்றை தாபிக்கும் பொருட்டு ரூபா 34,776 தொகை செலவிடப்பட்டு பத்திரிகை விளம்பரமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதற்காக தனியார் நிறுவனமொன்றுடன் 2009 மே 18 ஆம் திகதி ரூபா 1,080,460 தொகைக்கு 03 மாதங்களில் அடையாள அட்டையை வழங்குதல் என்ற இணக்கப்பாட்டின் அடிப்படையில் ஒப்பந்தம் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2011 மே மாதம் வரையில் அதன் மூலம் 1064 மாணவர்களுக்கு அடையாள அட்டை விநியோகிக்கப்பட்டிருந்தது. மேற்குறித்த உடன்படிக்கையின் பிரகாரம் தாமதமான காலப்பகுதிக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 1,515,525 தொகையான தண்டப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) நிறுவகத்தின் பிரதான கட்டிடத்தின் 1358 சதுர அடி அளவிலான நிலப் பகுதியை 2001 ஆம் ஆண்டிலிருந்து வெளிநபரொருவருக்கு சிற்றுண்டிச்சாலையொன்றை நடாத்திச் செல்வதற்காக வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன், மாதாந்த வாடகை வருமானத்திலிருந்து ரூபா 3,000 தொகையை உத்தியோகத்தர்களின் நலன்புரிச் சங்கத்திற்கு வழங்கி ரூபா 1,000 தொகையான மாதாந்த வாடகை மட்டுமே நிறுவனத்திற்கு அறவிடப்பட்டு வந்தது. அவ்வாறே சிற்றுண்டிச்சாலைக்கான நீர் மற்றும் மின்சாரத்திற்காக எவ்வித கட்டணமும் அறவிடப்படாதிருந்ததுடன், அதன் பாவனைக்காக 37 நிலையான சொத்து விடயங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டில் ரூபா 126,450 செலவிடப்பட்டு உபகரணங்களும் வழங்கப்பட்டிருந்தன.

(ஊ) நிறுவகத்தினால் 2005 முதல் 2010 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பட்டப்பின் படிப்பு பாடநெறிக்காக 2,824 மாணவர்கள் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன், அக்காலப்பகுதியில் பாடநெறிகளைப் பூர்த்தி செய்யாத மாணவர்களின் எண்ணிக்கை பதிவு செய்த மாணவர்களின் எண்ணிக்கையின் 56% ஆன அதாவது 1,584 மாணவர்களாகும்.

### 2.2.2 நிதியத்தின் குறைப் பயன்பாடு

------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வருடக் கணக்காக முன்கொண்டுவரப்படும் 2010 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் பூர்த்தி செய்யப்படாத 20 ஆய்வுச் செயற்திட்டங்களுக்குரிய மேற்கொள்ளப்படாத செலவினம் ரூபா 1,654,669 தொகையாக இருந்தது.

(ஆ) 2005 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளில் வெளியக ஆராய்ச்சிகளுக்காக எவ்வித செலவினத்தையும் மேற்கொள்ளாத 02 செயற்திட்டங்களுக்குரிய முறையே ரூபா 20,000 மற்றும் ரூபா 581,593 உம் ஏனைய மானியங்களின் கீழ் 2005 ஆம் ஆண்டு கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 300,000 தொகையும் மீளாய்வாண்டின் இறுதி வரையில் பயன்படுத்தப்படாமல் இருந்தது.

(இ) 2006 ஆம் ஆண்டின் போது விவசாய விஞ்ஞானப் பட்டபின் படிப்பு நிறுவகத்தின் கீழ் உள்ள சேதன விவசாய தேசிய மத்திய நிலையம் (NCOA) மூலம் நிறுவகத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 196,000 பெறுமதியான மடிக் கணனி செயற்படும் நிலையில் இல்லாதிருந்ததுடன், கணக்காய்வு திகதி வரையில் அச்சொத்து செயற்பாடற்றுக் காணப்பட்டது.

### 2.2.3 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

(அ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டம் மற்றும் 1979 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க கட்டளைகளின் பிரகாரம் விவசாய விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் கீழ் எந்த வகையான நிலையமொன்றையும் ஸ்தாபிப்பதற்காக சட்டரீதியான ஏற்பாடுகள் இல்லத போதிலும், செயற்திட்ட நடவடிக்கையின் நோக்கில் 2008 ஆம் ஆண்டு முதல் தேசிய விவசாய சேதன நிலையம்(NCOA) மற்றும் வலுவினை உற்பத்தி செய்யும் நிலையம் (CRES) என்ற பெயரில் 02 நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன.

(ஆ) வலுவினை உற்பத்தி செய்யும் நிலையத்திற்காக கட்டுப்பாட்டுச் சபை மற்றும் முகாமைத்துவ சபை என்பவற்றின் அங்கீகாரமின்றி ரூபா 800,000 தொகை பேராதனைப் பல்கலைக்கழகத்தின் இரண்டு வருகை தரும் விரிவுரையாளர்களுக்கான விரிவுரைக் கட்டணமாக செலவிடப்பட்டிருந்தது. மேலும் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் இரண்டு விரிவுரையாளர்கள் மேற்குறித்த நிலையங்களில் பணிப்பாளர்களாக ஆட்சேர்க்கப்பட்டு பணிப்பாளர் கொடுப்பனவாக ரூபா 1,126,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) பல்கலைக்கழகத்தின் தாபன விதிக்கோவையின் iii ஆம் அத்தியாயத்தின் 1.2.8 இன் பிரகாரம் விஞ்ஞானப் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் பணிப்பாளருக்கு, கட்டுப்பாட்டுச் சபையினால் உரிய அதிகாரங்களை வழங்காதிருந்த நிலையில் வெளிநாட்டு மானியங்கள் மூலம் நடாத்திச் செல்லப்படும் Crossing Boundries செயற்திட்டத்தின் கூட்டிணைத்தல் நடவடிக்கைக்காக வெளிநபர் ஒருவர் நியமிக்கப்பட்டு அவருக்கு மாதாந்தம் ரூபா 80,000 வீதம் 2010 ஏப்ரல் மாதம் முதல் திசெம்பர் மாதம் வரையில் ரூபா 720,000 சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

### 2.2.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கை சபையின் ஆராய்ச்சிச் செயற்திட்டங்களுக்கான உடன்படிக்கையின் இலக்கம் 7(iii) இன் பிரகாரம், ஆராய்ச்சி நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் செயற்திட்டத்திற்குச் சொந்தமான நிலையான சொத்துக்கள் நிறுவகத்திற்கு பொறுப்பளிக்கப்பட வேண்டிய போதிலும், ஆராய்ச்சி நடவடிக்கைகளை பூர்த்தி செய்த 04 செயற்திட்டங்களுக்குரிய ரூபா 1,415,374 ஆன நிலையான சொத்துக்கள் 2010 திசெம்பர் வரையிலும் நிறுவகத்திற்கு பொறுப்பளிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 பதவியணி முகாமைத்துவம்**

கல்விசார் பதவியணியின் வெற்றிடங்கள் 09 ஆக இருந்ததுடன், அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், மீளாய்வாண்டினுள் வருகை தரும் விரிவுரையாளர்களுக்காக ரூபா 13,883,972 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**2.2.6 கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டம்**

நிறுவகத்தினால் கூட்டிணைந்த திட்டமொன்றும் வருடாந்த செயலாற்றுகைத் திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டு முகாமைத்துவ சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்துடன், 2007 திசெம்பர் 18 ஆம் திகதிய பீஈடி/47 ஆம் இலக்க அரச முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு நிதியாண்டின் ஆரம்பத்தின் போதும் ஆகக் குறைந்தது 15 நாட்களுக்கு முன்னர் நாளது வரையாக்கப்பட்ட கூட்டுத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்காக அத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.7 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதீட்டின் வருமானங்கள் மற்றும் செலவினங்கள் அதன் உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவினங்கள் என்பவற்றை ஆய்வு செய்கையில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 15 வரவு விடயங்களுக்குரிய மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 18,490,001 ஆல் மிகைத்திருந்ததுடன், அதன் வீதம் 12% முதல் 275% சதவீத வரையான வீச்சில் காணப்பட்டது. 02 வரவு விடயங்களுக்குரிய மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 133,995 தொகையான பற்றாக்குறையாக இருந்ததுடன், அவை 21% முதல் 64% வீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது. இதன் காரணமாக பாதீடு சிறந்த முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தாமல் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிதிப் பிரமாணம் 50(ii) இன் பிரகாரம், வருடாந்த மதிப்பீட்டினை இயலுமான வரையில் சரியாகவும் முழுமையாகவும் தயாரித்துக் கொள்வது பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக இருந்த போதிலும், 24 செலவின விடயங்களுக்குரிய 16% முதல் 100% வரையான ரூபா 20,963,328 ஆன சேமிப்பொன்று காணப்பட்டதுடன், 07 செலவின விடயங்களில் 16% முதல் 129% வரை அதாவது ரூபா 1,328,687 ஆன மதிப்பீடு மிகைத்திருந்தது.

## 3 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் அவ்வப்போது எனது அறிக்கைகளின் மூலம் பணிப்பாளருக்கு சுட்டிக் காட்டப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிலையான சொத்துக்களுக்கான கணக்கீடு

(இ) முற்பணங்களைத் தீர்த்தல்

(ஈ) கொள்வனவுகள்

(உ) ஆராய்ச்சி மற்றும் மானியங்கள் தொடர்பான நடவடிக்கைகள்

(ஊ) பொருள் மெய்மையாய்வினை மேற்கொள்ளல்

(எ) குறுகியகால பாடநெறிகளை நடாத்துதல்

(ஏ) பாதீட்டுக் கட்டுப்பாடு